www.tamilarangam.net

விஸ்வானந்ததேவன் நினைவுப் பேருரை - I

# கனிவுமில்லைக் கருணையுமில்லை

தென்னாசியப்பிராந்திய அரசியலில்
இந்தியாவின் பங்கு பற்றிய
ஒரு கருத்து

சி. சிவசேகரம்

15-10-1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

Segar.

விஸ்வானந்ததேவன் நினைவுப் பேருரை : 1

# கனிவுமில்லைக் கருணையுமில்லை

தென்னாசியப்பிராந்திய அரசியலில்
இந்தியாவின் பங்கு பற்றிய
ஒரு கருத்து.

சி. சிவசேகரம்

15-10-1989.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நண்பர்கள்
42 Blackhorse Lane
London E17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

காலஞ் சென்ற நண்பர் விஸ்வானந்த தேவனுக்கும் எனக்கும் 1970ம் ஆண்டில் அறிமுகம் ஏற்பட்டது. அவரது அரசியற் கருத்துக்கட்கும் எனது கருத்துகட்குமிடையிலான அடிப்படையான ஒற்றுமை அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தின. ஆயினும் சில குறிப்பான விஷயங்களில், முக்கியமாக ஜே.வி.பி. பற்றிய நிலைப்பாடு,1977 தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை எவ்வகையில் ஆதரிப்பது போன்ற விஷயங்களில், கருத்து வேறுபாடுகள் இருந்தன இவ்வாறே அவருடன் தொடர்பு அற்றுப்போன காலத்திலும், தேசிய விடுதலை பற்றியும் அடக்குமுறைக்கு எதிரான விடுதலைப்போராட்டம் சரியானது, அவசியமானது,தவிர்க்கஇயலாதது என்பது பற்றியும் அடிப்படையான உடன்பாடு இருந்த போதும், தமிழ் ஈழம் என்பதை பிரச்சனையின் தீர்வாக முன்வைப்பது தவறானது என்பது என் எண்ணமாகவும் அது சரியான தந்திரோபாயமென்பதும் அவரது எண்ணமாயும் இருந்தன. அவர் இன்று உயிருடன் இருந்திருப்பினுங் கூட , நம் கருத்து வேறுபாடு மாறியிருக்குமோ தெரியாது.

எவ்வாறுயினும் அவரது அரசியல் நேர்மையும் நேரடியான ஒளிவுமறைவற்று மனதிற் பட்டதைப் பேசும் பண்பும் என் மதிப்பிற்குரியன. அவரிடமிருந்த ஸ்தாபன திறமைகள் எந்த இயக்கத்திற்கும் அவசியமானவை. அவரது இழப்பு இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு அரிய இழப்பு, இன விடுதலையின் பேரில் சுயலாபமும், கொலையும், கொள்ளையும், துரோகங்களும் பல்வேறு இழி செயல்களும் நடக்கும் சூழ்நிலைகளில் தவறுகளை தவறுகளெனச் சுட்டிக்காட்டத் தயங்காத துணிவுமிக்க ஒரு மனிதர் அவர். இன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் இருண்ட சூழ்நிலையில் ஒளிதரக்கூடிய சுடர்கள் தினந்தினம் அணைக்கப்பட்டு வருகின்றன. அவர் இருந்திருந்தால் இருளின் தூதுவர்கள் தம் கைகளை அவர் மீதும் பதித்திருக்கக்கூடும். ஆயினும் இலங்கை மக்களின் எதிரிகளை அடையாளங்காட்டாமலும் அவர்கட்கு எதிராகக் குரலெழுப்பாமலும் அவரால் இருந்திருக்க முடியாது.

www.tamilarangam.net

நண்பர் விஸ்வானந்ததேவனை நினைவுகூரும் போது இன விடுதலைக்காகப் போராடி உயிர்கொடுத்த ஒவ்வொரு நல்ல மனிதரையும் நாம் நினைவுகூருகிறோம். நீதிக்கும், நியாயத்திற்கும், விடுதலைக்குமான தேவையை நினைவுகூருகிறோம். இன்னும் நீண்டு தொடரவிருக்கும் போராட்டத்தை நினைவகூருகிறோம். நண்பன் விஸ்வானந்ததேவன் நினைவாக ஏற்பாடுசெய்யப்பட்ட இந்நிகழ்ச்சியின் பகுதியான எனது உரை இந்திய மேலாதிக்கம் பற்றியதே எனினும் தவிர்க்க முடியாமல் இலங்கைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இது விரிவான வரலாற்று ஆய்வல்ல. எனினும் வெறும் அபிப்பிராயங்களின் கோவையுமல்ல. நமது நாட்டின் பிராந்தியத்தில் சமீபகால வரலாற்று விருத்தி ஒன்றைப் பற்றிய சுருக்கமான தொகுப்பாக இதைக் கருதலாம். இது இந்தியா பற்றிய பிரமைகள் அளியவும் சில விடுதலை இயக்கங்கள் பற்றிய மயக்கங்கள் தெளியவும் உதவுமாயின், அது என் சிறிய பங்களிப்பிற்குப் போதிய விளைபயனாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கனிவுமில்லைக் கருணையுமில்லை

**தென்னாசியப் பிராந்திய அரசியலில்
இந்தியாவின் பங்கு பற்றிய
ஒரு கருத்து**

இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு என்பது பற்றி இந்திய அரசின் சமீபகாலப் போக்கை அங்கீகரிப்போரும் மறுப்போரும் உடன்படுவார்கள். இந்தியாவின் சனத்தொகையும் பூ பரிமாணமும், பொருளாதார வாய்ப்புக்களும் அதனை ஒரு வலிய சர்வதேச அரசியல் பொருளாதார ராணுவ வல்லரசாக விருத்தி செய்ய வல்லன. இந்தியாவின் விருத்தி அதன் அயல் உறவுகளை எவ்வாறு பாதிக்கின்றது என்பது தென்னாசியப் பிராந்திய அரசியலில் மிகவும் முக்கியமானது. நீண்டகாலப் பார்வையில் வரலாற்றின் முற்போக்குச் சக்திகளே வெற்றிபெறுவன எனினுங் குறுகியகாலப் பார்வையிலும் விடுதலைப் போராட்டத் தந்திரோபாயங்களிலும் வல்லரசு அரசியல் பற்றித் தெளிவானதும் சரியானதுமான ஒரு மதிப்பீடு அவசியம். உலகின் இருபெரு வல்லரசுகளினதும் அவர்களது சர்வதேச அரசியல் ராணுவ முகாங்களதும் போக்குகள் பற்றி நாம் அறிவோம். அவற்றின் செயற்பாடு பற்றியும் நிலைப்பாடு பற்றியும் ஒவ்வொருவரது அரசியல் நிலைப்பாட்டையும் உலகநோக்கையும் ஒட்டி அபிப்பிராயங்கள் வேறுபட லாம். ஆயினும் அவற்றின் போக்கை விளங்கிக்கொள்வதில் அரசியல் அவதானிகட்கு அதிகம் சிரமம் இராது. இந்தியா போன்ற பிராந்திய வல்லரசின் நிலை சிறிது சிக்கலானது. பொருளாதார விருத்திக்கான போராட்டத்தில் பன்னாட்டு நிறுவனங்களது ஆதிக்கத்தாலும் ஏகாதிபத்தியவாதிகளது இடையறாத சுரண்டலாலும் தலையீட்டாலும் முன்னேறமுடியாதுதிணறும் அளவிலும் பெருவல்லரசுகளின் சர்வதேச அரசியல் இழுபறியில் சிக்குண்டு தவிக்கும் சூழ்நிலைகளாலும் இந்தியா மூன்றுமுலக நாடுகளில் ஒன்றுகவுள்ளது. மறுபுறம், இந்திய சமுதாய மாற்றத்திற்கான புரட்சிகர எழுச்சியை ஒடுக்கும் தேவையையும் இந்திய எல்லைகட்கு வெளியே தன் பொருளாதார ஆதிக்கத்தை விஸ்தரிக்கும் தேவையையும் கொண்ட ஒரு முதலாளி வர்க்கத்தின் அதிகாரத்துக்குட்பட்ட இந்திய அரசு தன் நலன்களைப் பேணுவதற்காகத் தன்னை ஒரு பிராந்திய வல்லரசாகவும் மேலாதிக்க சக்தியாகவும் நிறுவ முற்படுவதால், மற்றைய தென்னாசிய மூன்றுமுலக நாடுகளின் நலன்கட்கு விரோதமாகச் செயற்படுகிறது. இந்திய அரசின் நடத்தையை ஒருவர் வரவேற்பதோ எதிர்பதோ அவரது சமுதாயப்பார்வையைப் பொறுத்த விஷயமெனினும், இந்திய அரசின் செயலகளை முற்போக்கான அரசியற் கோணத்தினின்றுபுறநிலையதார்த்தமாக ஆராயவும் விளங்கிக் கொள்ளவும் இயலும். என்னுடைய நோக்கம் இந்திய துணைக் கண்டத்தின் ஒடுக்கப்பட்ட மக்களதும் நாடுகளதும் விடுதலைக்கும் விமோசனத்திற்குந் தொடர்பான முறையில் இப்பிராந்தியத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய அரசின் அயல்விவகாரங்களைச் சுருக்கமாக ஆராய்வதே.

## 2

இந்திய மேலாதிக்க வாதம் ,இந்திய விஸ்தாரிப்பு வாதம் போன்ற சொற்றொடர்கள் எவ்வளவு தவறாகவும் கவனயீனமாகவும் பிரயோகிக்கப்பட்டுக் கொச்சையாக விளக்கப்பட முடியும் என்பதற்கு 1968-1970இல் ஜே.வி.பி. மலையகத் தமிழர்களை இந்திய விஸ்தாரிப்புவாதத்தின் கரங்களாக அடையாளங் கண்டது ஒரு நல்ல உதாரணம். இன்று இலங்கையில் இந்தியப் படைகள் நிற்பதன் நோக்கமும் ,நிற்கும் சூழ்நிலையும் இந்தியா இலங்கையைத் தன் நேரடியான ராணுவ அதிகாரத்தின் கீழ் கொண்டுவரும் முயற்சியே என்ற வாதமும், மாறாக, இலங்கையில் இந்தியப் படைகள் அமைதிகாக்க மட்டுமே நிற்கின்றன, என்ற வாதமும் தவறானவை.முன்னைய வாதம் இந்தியா தன் விஸ்தாரிப்பு வாதநோக்கத்தை எவ்வாறு செயற்படுத்துகின்றது என்று அறியாததன் விளைவு ; பின்னையது இந்தியாவிற்கு விஸ்தாரிப்பு நோக்கமே இல்லை என்ற பாசாங்கின் வெளிப்பாடு.இவை இரண்டுமே ஆபத்தானவை இந்திய அரசு, அதிகார வர்க்கம், ஆளுங்கட்சி, இந்திய மக்கள் அனைத்தையும் ஒன்றாக குழப்பிக்கொள்ளும் போக்கும்,அரச இயந்திரத்திலுள்ளும், அதிகார வர்க்கத்திலுள்ளும் உள்ள முரண்பாடுகளைச் சரிவர விளங்கிக் கொள்ள இயலாமையும் இவ்வாறான தவறுகட்கு வழிவகுக்கின்றன.வர்க்க சமுதாயத்தில் வர்க்க அரசியலே அடிப்படை யானது என்பதை உணராது அரசியல் இயக்கங்களிற் தனிமனிதர்களது பங்களிப்பை மிகைப்படுத்தும் வழக்கமும் இதற்கு உடந்தையாகிறது. தனிமனிதர்கள் வர்க்கங்களதும், இயக்கங்களதும், அவற்றின் போராட்டங்களதும் பிரதிநிதிகளாகவே செயற்படுகிறார்கள். மாற்றங்கள் அடிப்படையில் சமுதாய வரலாற்றுச் சூழ்நிலையின் விளைவாக ஏற்படுகின்றனவேயன்றித் தனிமனிதர்களது விருப்பங்களின் விளைவாகவல்ல. மனிதர்கள்,தனித்தனியே ,வரலாற்றின் கையில் உள்ள சிறு கருவிகளேயன்றி அதன் படைப்பாளிகள் அல்ல: வர்க்க சமுதாயத்தின் வரலாற்றை மனித சமுதாய வர்க்கங்களே நிகழ்த்தி விருத்தி செய்கின்றன.இந்தியா எனும் பிராந்திய வல்லரசின் விருத்தியை இந்த அடிப்படையில் விளங்கிக் கொள்வதன் மூலமே தென்னாசிய மக்களது விடுதலைக்கும் விமோசனத்துக்குமான சக்திகள் இந்திய மேலாதிக்கவாதத்தையும், விஸ்தாரிப்பு வாதத்தையும் சரிவர அடையாளங் கண்டு தமது போராட்டத்தைப் பலப்படுத்தி வெற்றியை உறுதிப்படுத்த முடியும்.

தென்னாசியாவில் பிரித்தானிய ஆதிக்கத்தின் சரிவையடுத்து இந்தியாவின் செல்வாக்கு எழுச்சி பெறும் வாய்ப்பு இருந்த போதும் , இந்தியாவின் முதன்மைக்கு , அமெரிக்க சோவியத் பெருவல்லரசு களிடையே பூகோள ஆதிக்கத்திற்காக இருந்து வந்த போட்டி தடையாக இருந்தது. அண்மைக்காலத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பெருவல்லரசுகளின் போட்டியில் ஏற்பட்டுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தளர்ச்சி இந்தியாவின் எழுச்சிக்கு வசதியேற்படுத்தியுள்ளது. இதன் முக்கியத்துவமும் நமது கவனத்துக்குரியது. இவ்வாறு வேகமாக விருத்தியடைந்து வரும் ஒரு அரசியற் சூழலில் இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாக உருவான வரலாற்றுச் சூழ்நிலையையும் அதன் சமகால நிலையையும் எதிர்கால வாய்ப்புகளையும் மேற்கொண்டு அவதானிப்போம்.

இந்தியா எனப்படும் அரசியற் பூ பிரதேசம் பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சுதந்திரம் தரும் வரை எந்த ஒரு சரித்திர காலத்திலும் ஒரு தனிநாடாகவோ அரசாகவோ சாம்ராஜ்யமாகவோ கூட இருந்ததில்லை.

அசோகனுடைய காலத்து மௌரியப்பேரரசு தென்னிந்தியாவிற் பெரும் பகுதியை உள்ளடக்கவில்லை. முகலாயப்பேரரசுகளும் இந்தியாவின் முழுப் பிரதேசத்தையும் ஆளவில்லை. இத்தகைய பேரரசுகள் காலத்திற்குக் காலம் உலகின் பல வேறு பகுதிகளில் எழுந்தும் விரிந்தும் விழுந்தும் அழிந்தும் உள்ளன. ஆயினும் சமீப வரலாற்றில் ரஷ்யப் பேரரசு மட்டுமே நீடித்து ஒரு அரசியல் அமைப்பாகத் தொடர்ந்தது. இதனைச் சாத்தியமாக்கியது ஒக்டோபர் புரட்சியின் மகத்தான ஒரு சாதனை எனலாம். சீனாவில் பல வேறு தேசிய இனங்கள் இருப்பினும், ஹான் இனத்தோரே மிகப் பெரும்பான்மை இனமாக (92% சனத்தொகையினராக ) இருப்பதாலும் சீன விடுதலை ஏற்பட்ட அரசியற் சூழ்நிலையாலும் சீனா ஒரு தேசமாக எழுவதில் அதிக சிக்கல்கள் இருக்கவில்லை. ஐரோப்பாவையோ, லத்தீன் அமெரிக்காவையோ, அரபு நாடுகளையோ, கறுப்பு இன ஆபிரிக்காவையோ, விடக்குறைந்த அளவிலேயே பொதுவான தேசிய குணாம்ஸங்களையுடைய இந்தியப் பிரதேசம் பிரித்தானிய கொலனித்துவத்தினாலேயே ஒரு தேசமாக ஐக்கியப்படுத்தப்பட்டது. பிரித்தானிய ஆட்சியின் கீழும், இந்தியா முழுவதும் கொலனித்துவ நிர்வாகத்தால் ஆளப்படவில்லை. இந்தியா எனப்படும் பிரதேசத்திற்குக் கலாசார ஒருமையையும் வரலாற்றுத் தொடர்ச்சியும் வழங்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்தோ ஆரிய கலாசார அடிப்படையில் அமைந்ததோடு இன, மத, மொழி அடிப்படையிலான வேறுபாடுகளைக் குறைவுபடுத்தும் முயற்சியின் போக்கில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் தனித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் அலட்சியம் செய்தன. சமஸ்கிருதமே இந்திய மொழிகளின் மூலமொழி என்ற தவறான கருத்தும் அதன் அடிப்படையில் சமஸ்கிருதம் இந்தியாவின் தேசிய மொழியாக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் பின்னர் இந்துஸ்தானி மொழி பெரும்பான்மையினரது மொழி என்பதால் அதுவே தேசியமொழியாக வேண்டும் என்ற கருத்தும் பலரது மொழிவழித் தேசிய உணர்வைப் புண்படுத்தியது. இந்தியாவின் தேசிய கலாச்சார ஒருமையை வேதகாலத்திற்கும் அதனின்று விருத்தியடைந்த இந்துக்கலாச்சாரத்திற்கும் தொடர்பு படுத்தியவர்கள் தம்மையறியாமலே பழைய இந்து-முஸ்லிம் அரசர்களிடையான மோதல்களை நினைவூட்டி இந்து மத வெறியையும் இந்து ஆதிக்கம்

www.tamilarangam.net

பற்றிய முஸ்லிம்களின் அச்சத்தையும் வளர்க்க உதவினர். நால்வர்ண முறையின்மீது கட்டியெழுப்பப்பட்ட சாதி அமைப்பும் சாதி அடக்குமுறையும் இந்தியாவின் தேசிய ஒருமைக்கு எதிரான மிரட்டலாக அமையாவிடினும் ஐக்கியத்துவத்துக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் கேடாகவே அமைந்தன. இவ்வாறான வேறுபாடுகளைப் பிரித்தானிய கொலனி ஆட்சி தன்னுடைய வசதிக்கேற்பப் பயன்படுத்தியது. கொலனித்துவ ஆட்சி முழு இந்தியா மீதும் நேரடியான அதிகாரம் செலுத்தாததோடு பிரதேசங்களை முற்றிலும் மொழிவழி அடிப்படையில் நிறுவவோ நிர்வகிக்கவோ முனையவில்லை. சுதந்திரத்தின் பின் பிரித்தானியர் ஆண்ட பிரதேசங்கள் மட்டுமன்றி இந்திய எல்லைக்குள்ளிருந்த சகல சமஸ்தானங்களையும் சிற்றரசுகளையும் இந்திய அரசின் ராணுவ பலத்தின் காரணமாகவே இந்திய ஒன்றியத்துள் இணைக்க முடிந்தது. அரசுகள் உடன்படாத சூழ்நிலைகளில் மிரட்டலும் படையெடுப்பும் பயன்படுத்தப்பட்டன. காஷ்மீர் அரசர் இந்து என்பதால் இஸ்லாமிய பெரும்பான்மையினர் பற்றியும் பாக்கிஸ்தான் பற்றியும் இருந்த அச்சங்களையிட்டு காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் கருத்துக்கு உடன்பட்டார். காஷ்மீர மக்களது விருப்பங்கள் கணிப்பிலெடுக்கப்பட வேண்டும் என்ற பரவலான உலக அபிப்பிராயம் புறக்கணிக்கப்பட்டது. பாக்கிஸ்தான் படையெடுப்பு காஷ்மீரின் ஒரு பகுதியை இந்தியப்பிடியினின்று மீட்டபோதும் காஷ்மீரப்பிரச்சனையைத் தீர்க்க உதவவில்லை. இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் இருந்த நேபாளமும், பூட்டானும் சிக்கிமும் இந்தியாவுக்குள் இணைக்கப்படாத போதும் அவற்றின் பூகோள அமைப்புகாரணமாகவும் வரலாற்று நிர்ப்பந்தங்களாலும், இந்தியாவின் பொருளாதார, அரசியல் ஆதிக்கத்துக்குட்பட நேர்ந்தது.

இந்தியாவின் தேசியத்தன்மையை அடையாளங் காட்டவும், ஒருமைப்படுத்தவும் பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியையும் சுதந்திரப் போராட்டத்தையும் விடப்பெரிதாகவும் வலிதாகவும் எதுவும்இருக்கவில்லை. இந்தியைத் தேசியப் பொதுமொழியாக ஏற்க வேண்டும் என்ற கருத்து சுதந்திரப் போராட்டத்தின்போது ஓரளவு பரவலான அங்கீகாரத்தை பெற்றது. விடுதலையையடுத்து, இந்தியைப் பிறமொழி பேசுவோர் மீது திணிக்கும் முயற்சியாகவே பேரினவாதிகள் இதைக் கருதினர். மறுபுறம் இந்தி பேசாதோரின்தேசிய உணர்வுகள் தமது மொழிஉரிமைகட்காகக் கிளர்ந்து எழுந்தன . இதன் விளைவாக ஆங்கிலமே இன்னமும் இந்தியாவின் இணைப்பு மொழியாகத் தொடர்கிறது. பாக்கிஸ்தான் பிரிவினை இந்து-முஸ்லிம் பகைமையை மேலும் வளர்த்தபோதும் , இந்தியா மதச்சார்பற்ற நாடாக இருக்குமென்ற உறுதிமொழி காரணமாக, பாக்கிஸ்தான், எல்லை மாகாணங்கள் தவிர்ந்த பிற மாநிலங்களின் முஸ்லிம்கள் அனைவரும் இந்திய ஒன்றியத்திலேயே தொடர்ந்து வாழமுடியும் என்று நம்பினர். இந்து மதவெறியைப் பெருவாரியான அரசியற் கட்சிகள் நிராகரித்த போதும், ,இந்து மதவெறியை அடிப்படையாகக் கொண்ட அரசியற்கட்சிகள் சில அண்மைக்காலமாக வளர்ந்து வந்துள்ளதோடு பிரதான பாராளுமன்ற அரசியற் கட்சிகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(மாக்ஸிய அரசியற் கட்சிகள் நீங்கலாக) இந்து மத வெறிக்கு வளைந்து கொடுக்கும் சந்தர்ப்பவாதப் போக்கு வளர்ந்துள்ளது. சீக்கிய மக்களது தேசியத் தன்மை மத அடிப்படையிலானது என்ற காரணத்தால், சீக்கியர் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படாததாலும் அவர்களுக் கென ஒரு மாநிலம் உருவாக்கப்படாததாலும், இந்து-சீக்கிய மோதல் இன்றைய பயங்கர நிலைக்கு வந்துள்ளது. இவ்வாறு சாதிப்பூசல்களும் சாதி அடக்குமுறையும் ஒவ்வொரு மாநிலத்திலும் பெருகிவருகின்றன.

காங்கிரஸ் ஆட்சி மதம், மொழி, சாதி வேறுபாடற்றுச் சட்டத்தின் முன் சமத்துவம் பேணுங் கொள்கையைப் பிரகடனம் செய்த போதும், ஆளும் தேசிய முதலாளி வர்க்கமும் காங்கிரஸ் ஆட்சி தொடர்வதற்கு அவசியமான கிராமிய நிலவுடமை வர்க்கமும் சாதி அடக்குமுறையும் மதவெறியை மொழிவெறியை ஒழிக்கத் தயாராக இல்லை. சாதி, மொழி, மத வெறிகள் மாறிவரும் அரசியற் சூழ்நிலைகளில்,வெவ்வேறு புதிய வடிவங்களில் தமது அரசியல் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

நூற்றுக்கணக்காக மொழிகளும் கிளை மொழிகளும் தேசிய இனப்பிரிவுகளும் உள்ள ஒரு பெரும் பிரதேசத்தின் தேசிய ஒருமைப்பாடு சமத்துவத்தினதும் சகிப்புத்தன்மையினதும் அடிப்படையிலேயே கட்டியெழுப்பட முடியும் பிரதானமான தேசிய இனங்கள் மத்தியில உள்ள முரண்பாடுகள் ஒருபுறமிருக்க இந்தியாவின்பூர்வகுடிகளின் உரிமைகள் படிப்படியாக நிலவுடமை வர்க்கத்தாலும் முதலாளித்துவ சுரண்டலாலும் பறிக்கப்பட்டு வருகின்றன.பிளவும் ,பிரிவினையும் இந்தியாவின் சகல மக்களதும் நலனுக்கு விரோதமானவை . எனினும் அடிப்படையான சமுதாய முரண்பாடுகளை தீர்க்கத் தயாராக இல்லாத ஆளும் வர்க்கம் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஒரு முக்கிய எதிரியாக உள்ளது.இந்த ஆளும் வர்க்கம் பொருளாதார ராணுவ அரசியல் பலம் மிக்க பிராந்திய வல்லரசாக இந்தியாவை நிறுவவும் அதன் மூலம் இந்தியாவின் உள்ளும் வெளியிலும் தன்னை மேலும் ஸ்திரப்படுத்தவும் முனைகிறது.

சகல தேசிய இனங்கள் மத்தியிலும் மதங்கள் மத்தியிலும் சமத்துவம் சாதி வேறுபாடின்மை போன்ற இலக்குகளை ஒரு சுரண்டற் சமுதாயத்தில் சுரண்டும் வர்க்க ஆட்சியாளர் சாதிக்கமுடியாது.எனவே இந்தியாவின் ஆளும் வர்க்கம் ஒரு மேலெழுந்தவாரியான தேசிய ஒற்றுமையை அரசு வலிமை மூலம் பேணவும் தன் செல்வாக்கை இந்தியத் துணைக்கண்ட பிராந்தியத்தில் விஸ்தரிக்கவும் முற்படும்போது அதற்கு வழிகாட்டியாக அதன் முன்னோடியான பிரித்தானிய இந்திய ராஜ்யமே அமைந்தமை தற்செயலானதல்ல. புதிய சாஹிப்கள் பழைய சாஹிப்களின் இடத்தைப் பிடித்துப் பழைய இடைவெளிகளை நிரப்ப முயல்கிறார்களேயொழியப் புதிய சமுதாயத்தை அமைக்க விரும்பவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3

கொலனித்துவத்தின் கீழ் நூற்றாண்டு காலமாக அனுபவித்த சிறுமைகளும் பாக்கிஸ்தான் பிரிவினை தேசியப் பெருமிதத்துக்கு இழைத்த ஊறும் தொடர்ந்தும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் தேசிய முதலாளித்துவத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் இணைத்த போதும் , அதன் வர்க்க நலன்கள் பிரித்தானிய கொலனித்துவம் விட்டுச் சென்ற பூகோள அரசியல் அமைப்பைக் ,கேள்வியின்றித் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்துமாறு தூண்டின. இதன் விளைவாகவே ,இந்தியாவுக்கும் அண்டை நாடுகளுக்குமிடையிலான எல்லைப் பிரச்சனைகள் நீடித்தன. பாக்கிஸ்தானுடனான பிரச்சனை காஷ்மீர் விடயத்தில் மட்டுமின்றி பிற எல்லைகளிலும் இருந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேச்சுவார்த்தைகளை இழுத்து நீடிப்பதும் தாமதிப்பதும் பிரச்சனையை அலட்சியம் செயவதுமே நடைமுறையாக இருந்தது. இதன் விளைவாகவே சீன-இந்திய எல்லையில் சீனப்படையெடுப்பு நிகழ்ந்தது.

பாண்டுங் மாநாட்டில் பஞ்சசீலக் கொள்கை முன்வைக்கப்பட்ட சூழ்நிலையில் இந்தியா நாடுகளின் சமத்துவத்தையும் சுயாதீனத்தையும் உள்விவகாரங்களிற் தலையிடாமையையும் வலியுறுத்தியது. காலப்போக்கில் இந்த சமத்துவம் இந்தியாவினும் வலிய அல்லது அதற்குச் சமவலிமையுடைய நாடுகட்கும் இந்தியாவுக்குமிடையிலான சமத்துவமாக காணப்பட்டதேயொழிய இந்தியாவிற்க்கும் அதன் அயலில் உள்ள வலிமைகுறைந்த நாடுகளுக்குமிடையிலானதாகக் காணப்படவில்லை.

அணிசேரா நாடுகளின் மத்தியில் இந்தியாவின் முக்கியத்துவம், அந்த குழுவில் சீனாவும் பாக்கிஸ்தானும் முறையே சோவியத்யூனியனுடனும் அமெரிக்காவுடனும் இருந்து நடைமுறையற்றுப்போன உடன்படிக்கைகள் காரணமாகச் சேரமுடியாமையால் ஓங்கியது. இந்தியா அணிசேரா இயக்கத்தைத் தன் சர்வதேசச் செல்வாக்கை உயர்த்தப்ப ப்யன்படுத்தியது இயல்பானது .அங்கும் பொது நல நாடுகளிடையும் இந்தியா பரந்துபட்ட அளவில் நிற வெறிக்கும் கொலனித்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்திற்கும். எதிராகக் குரலெழுப்பியபோதும் குறிப்பான பிரச்சனைகளில் இந்தியாவின் தேசிய முதாலாளித்துவ நலன்களைச் சார்ந்தே இந்தியாவின் நிலைப்பாடு அமைந்திருந்தது.

நேரடியாக இந்திய நலன் சார்ந்த பிரச்சனைகளைக் கணிப்பிலெடுப்போமாயின் இந்தியா காஷ்மீர் பிரச்சனையில் நீண்ட காலமாகவே காஷ்மீர மக்களின் அபிப்பிராயத்தை கணிப்பிலெடுக்க மறுத்ததோடு இந்தியாவுடன் இணையமறுத்துக் காஷ்மீர சுதந்திரத்தை விரும்பிய பெரும்பான்மையினரின் பிரதிநிதிகளை கொடுமைக்கு உட்படுத்தியது.

சீன இந்திய எல்லைத்தகராறு யுத்தமாக வெடித்து இந்தியா பின்வாங்க நேரிட்டுச் சீனத்துருப்புகள் தாம் கைப்பற்றிய பிரதேசத்தினின்று தாமாகவே வெளியேறி பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்ததைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுத்தே இந்தியா தன் அயல் உறவுகளில் ஒரு தெளிவான நிலைப் பாட்டையும் நிச்சயமான முடிவுகளையும் நாடியது.குருஷ்சேவின் தலைமையின் கீழ் சோவியத் யூனியன் சீனாவுடனான உறவின் சீர்குலைவுக்கு வழியேற்படுத்தியது.அமெரிக்கா பாகிஸ்தான் நெருக்கம் காரணமாக சோவியத் யூனியன் இந்தியாவின் நட்பை விரும்பியது. சோவியத் சீன உறவின் சீர்குலைவை பயன்படுத்தி இந்தியா சோவியத் யூனியனுடனான உறவை மேலும் வலுப்படுத்த முற்பட்டது. இதன் விளைவாக இந்தியா பிராந்திய வல்லரசான நாடாக விருத்தியடையும் தேவைக்கு ஒரு ஆதரவு கிடைத்தது.சோவியத் யூனியனுக்குத் தென்னாசியப் பிராந்தியத்தில் ஒரு நேச சக்தியும் சீனாவுடனான அதன் முரண்பாட்டிற் பயன் படுத்த வசதியான ஒரு கருவியும் கிடைத்தன. சீனாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையிலான நல்லுறவு சீனாவுக்கு எதிராக பாக்கிஸ்தானை அமெரிக்கா பயன்படுத்தமுடியாதவாறு பாக்கிஸ்தான் சியாட்டோவில் செயற்பட்ட காலத்திலிருந்தே விருத்தியடைந்த போதும், சோவியத் இந்திய நேசஉறவால் மேலும் பல மடைந்தது.

சோவியத் யூனியனின் ஆதரவு, முன்னர் இந்தியா மேற்கொள்ளத் தயங்கிய விஸ்தரிப்பு நடவடிக்கைகளையும் அயல் விவகாரங்களிற் தலையீட்டையும் சாத்தியமாக்கியது.குருஷ்சேவின் கீழ் ஏகாதிபத்தியப் பெருவல்லரசான அமெரிக்காவுடனான உறவு, சமரசம், சமாதான சகஜீவனம் என்ற போர்வையின் கீழ் நடத்தப்போதும், அமெரிக்காவுக்குச் சமமான ஒரு ராணுவச்சக்தியாக மட்டுமன்றி சர்வதேச அரசியல் மேலாதிக்க சக்தியாகவும் சோவியத் யூனியனை விஸ்தரிக்கும் நடவடிக்கை தொடர்ந்தது. சோவியத் யூனியன் சோசலிஸ நாடுகட்கு ஒரு முன்னுதாரணம் என்ற வகையிலன்றிச் சோசலிஸ முகாமினுள் நிபந்தனைக்குங் கேள்விக்கும் அப்பாற்பட்ட தலைமை நாடாகக் கருதப்படவும், அதேவேளை, சோவியத் நலன்களைப் பேணும் வகையில் சர்வதேச உறவுகளையும் ஏகாதிபத்தியவிரோதப் போராட்டங்களையும் பயன்படுத்தவும் விழைந்தது.பிரேஷ்னேவின் கீழ், இப்போக்கு விருத்திபெற்று சோவியத் யூனியனை ஒரு ராணுவ வல்லரசாகவும் அமெரிக்காவுடன் உலகின் மேலாதிக்கத்தைப் பங்கு போடும் ஒரு மகா வல்லரசாகவும் கண்டது. எனவே அமெரிக்காவுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய நாடுகளைச் சோவியத் யூனியன் தன் அணைப்பிற்குட் கொண்டுவர முற்பட்டது. இந்திய-சோவியத் உறவில் ஏற்பட்ட இந்தப் புதிய திருப்பம் இரண்டு நாடுகளதும் மேலாதிக்க நோக்கங்கட்கு உடந்தையாக அமைந்தது.

இந்தச் சூழ்நிலையிலேயே இந்தியா தன் அயலில் உள்ள பகைமையான நாடுகளைப் பலவீனப்படுத்தவும் வலிமை குறைந்த நாடுகள்மீது தன் ஆதிக்கத்தை மேம்படுத்தவும் முற்பட்டது.

## 4

பழைய பாக்கிஸ்தான் மிகவும் செயற்கையான ஒரு தேச அமைப்பு. இந்தியக் கொலனித்துவ சமுதாயத்தின் சில முரண்பாடுகளும் அச்சங்களுமே அதன் அத்திவாரமாக அமைந்தன. பூகோளரீதியாகத் தொடர்ச்சியற்ற இரண்டு பெரும் நிலப்பரப்புகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு தேசமாக ஐக்கியப் படுத்துவதற்கு இஸ்லாம் மதத்தை விட எதுவுமே பொதுவாக இல்லாத நிலையில், மேற்குப் பாக்கிஸ்தான் கிழக்குப் பாக்கிஸ்தானிய வங்காளிகள் மீது செலுத்திய ஆதிக்கம் என்றே ஒருநாள் பிரிவினைக்கு வழிவகுத்திருக்கும். நீண்டகால ராணுவ ஆட்சியும் அதன் ஜனநாயக விரோதப் பாரம்பரியமும் 1971 இல் வங்காளதேச விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டின. வங்காள தேச மக்களது உணர்வுகளை பூட்டோ அரசாங்கம் மதிக்கத் தவறியதன் விளைவாக எழுந்த கிளர்ச்சியை ராணுவ அடக்குமுறை ஒரு விடுதலைப் போராட்டமாக வளர்த்தது. இந்தியாவுக்குள் கிழக்கு வங்காள அகதிகள் குவிந்ததைக் காரணங்காட்டி இந்தியா தன் நேரடியான ராணுவத்தலையீட்டை நியாயப்படுத்தியது

இந்திய தலையீட்டில் இரண்டு அம்சங்கள் முக்கியமானவை:
ஒன்று, இந்தியா பாக்கிஸ்தானின் உள்விவகாரங்களிற் தலையிட்டமை;
மற்றது, இந்தியா விடுதலைப்போராட்ட சக்திகளிடையே தனக்குச் சாதகமான சக்திகளை வளர்த்து மற்றைய சக்திகளை அழிக்கச் செயற்பட்டமை. இந்தியா கிழக்கு வங்காள அகதிகளைத் தன் எல்லைகட்குள் அனுமதிப்பதும் அவர்களது மனித உரிமைகட்காகக் குரல் எழுப்புவதும் மனிதாபிமானத்துக்குரியன. இந்தியா அவர்களது தற்பாதுகாப்புக்கு உதவி என்ற பேரில் அவர்கட்கு ராணுவப் பயிற்சியும் ராணுவ உதவியும் வழங்குவது பஞ்சசீலக்கொள்கைகட்கு முரணுக அமைவன. அதற்கு மேலாக இந்திய ராணுவம் மேற்கில் பாக்கிஸ்தானுடன் யுத்தம் தொடங்கிக் கிழக்கில் வங்காள விடுதலைப்படைகளுடன் சேர்ந்து செயற்பட்டமை ஆக்கிரமிப்புக்குரியது. முஜிபூர் ரஹ்மானின் தேசியவாதக் கட்சியும் அவர்களது விடுதலைப்படையும் வெறுமே பாக்கிஸ்தானிய ராணுவத்துடன் மட்டும் மோதவில்லை. முற்போக்கான, பாட்டாளிவர்க்க சார்புடைய விடுதலைப் படைகளையும் அவை குறிவைத்தன. பாக்கிஸ்தானிய ராணுவத்தின் தோல்வியையடுத்து இவர்களது முழுக்கவனமும் மற்றைய விடுதலைப் போராட்ட சக்திகள் மீது திரும்பின.

இந்தியா பாக்கிஸ்தானுடன் மோதும் போது சோவியத் யூனியனுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றையும் செய்து கொண்டது. இதன் மூலம் இந்திய தலையீட்டின் போது சீனுவோ மேற்கு நாடுகளோ பாக்கிஸ்தானுக்குச் சார்பாக தலையிடும் வாய்ப்பைக் குறைக்கலாம் என்று இந்தியா கருதியது; சோவியத் யூனியன் தென்னுசியாவில் தன் செல்வாக்கை விஸ்தரிக்கக் கருதியது. 1971 க்குப் பின்னர் இரு நாடுகளதும் விஸ்தரிப்பு, மேலாதிக்க நடவடிக்கைகள் உச்சமடைந்தது குறிப்பிடத்தக்கது.

வங்காள தேசத்தின் அரசியல் இந்தியாவுக்கு சாதகமான திசையில் செல்லவில்லை. முஜிபுர் ஆட்சி மக்கள் விரோத சக்தியாக மாறியது. அதன் வீழ்ச்சியைத் தடுக்க இந்திய ஆதரவாளர்களால் முடியவில்லை. வங்காள தேச அரசியல் மேலும் சீரழிந்து தொடரான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராணுவ சதிகளும் ராணுவ சர்வாதிகாரமும் அந்நாட்டின் ஜனநாயக மனித உரிமைகளை அழிக்க வழி வகுத்தன. இந்தியா விரும்பிய விதமாக ஒரு நேச சக்தியாக வங்காள தேச அரசு அமையாவிடினும், பாக்கிஸ்தானின் பிளவும் பலவீனப்படுத்தலும் இந்திய ஆளும் வர்க்கத்திற்கு ஒரு புதிய தென்பை அளித்தன. இதன் வெளிப்பாடாக, இந்தியா சிக்கிமின் உள்விவகாரங்களில் செலுத்திய ஆதிக்கம் போதாதென்று, அதை 1974 இல் இந்திய யூனியனில் ஒரு பகுதியாக இணைந்தது. இதையடுத்துக் காஷ்மீர் இந்திய யூனியனின் நிரந்தரமான ஒரு பகுதியாக்கப்பட்டது.

வங்காள தேச விடுதலைப் போரின் போது இலங்கை வகித்த நடுநிலையும் சிக்கிமின் இணைப்புப்பற்றி இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளின் எதிர்ப்பும் பெருவாரியான உலக நாடுகளது கருத்துடன் உடன்பாடாகவே இருந்தன. ஆயினும் இந்தியா இத்தகைய சுதந்திர உணர்வை எளிதாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. நேபாளமும், பூட்டானும் இந்தியாவின் எல்லைகளூடேயே தமது வர்த்தக அயலுறவுகளை வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்ததால் அவற்றைத் தட்டியடக்குவது இந்திய ஆளும் வர்க்கத்திற்குச் சிரமமான காரியமாகத் தெரியவில்லை. இலங்கையின் சர்வதேச முக்கியத்துவம் அதன் நடுநிலைமீதும் அணிசேரா இயக்கத்தில் இலங்கை பற்றிய உயர்வான அபிப்பிராயத்தின் மீதும் தங்கியிருந்தது. எனவே இலங்கையை வேறு விதமாகவே கையாளும் தேவை ஏற்பட்டது.

1973 க்குப் பின்னர் எண்ணெய் விலை அதிகரிப்பும் எரிபொருட் தட்டுப்பாடு பற்றிய அச்சங்களும் எண்ணெய்கான தேடல்முயற்சியை துரிதப்படுத்தின. பாக்கு நீரிணையிலுள்ள தீவுகளில் எண்ணெய்வளம் இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பு கச்சதீவு பற்றிய பிரச்சனையை வெளிக்கொண்டு வந்தது.இப் பிரச்சனையில் இந்தியா கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்தமை இலங்கையின் ராஜ தந்திரத்தின் வெற்றி என்று கருதப்பட்டது. ஆயினும், உண்மையில், இலங்கையின் இழப்புகள் கச்சதீவை விடப்பெரியவை. பாக்குநீரிணையில் உள்ள எண்ணைவளம் பற்றிய ஆய்வுகள் ஏற்கனவே இந்தியாவால் மேற்கொள்ளப்பட்டு கச்ச தீவில் எண்ணெய்வளம் இல்லை என்பது ஓரளவு உறுதியாக்கப்பட்டுவிட்டபின் கள்ளக் கடத்தல் காரர்கட்கு வசதியாக இருந்த ஒரு தீவை இலங்கை அரசிடம் அளிப்பதில் இந்தியாவுக்கு ஒரு பெரிய இழப்புமில்லை. மறுபுறம் வட பிரதேச மீனவர்கட்கு இந்தியாவின் தென் எல்லைவரையிலான கடலில் மீன்பிடிக்கும் பாரம்பரியமான உரிமைகள் காலவரையறையற்று இருந்தன, இலங்கை-இந்திய எல்லை உடன்படிக்கை திட்டவட்டமான எல்லையை வகுத்ததன் மூலம் இந்த உரிமைகள் வரையறுக்கப்பட்டன. இது வடபிரதேச மீனவர்களது நீண்டகாலப் பார்வையில் ஒரு இழப்பேயாகும்.

பிராந்திய அரசியலில் எற்பட்ட அடுத்த முக்கியமான திருப்புமுனை 1977ல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் எனலாம். 1977ல் யூ.என்.பி. அமோகமான பெரும்பான்மையுடன்

www.tamilarangam.net

அதிகாரத்துக்கு வந்த காரணங்களுள் முக்கியமானது 1970 இல் கிடைத்த பெரும்பான்மையால் ஏற்பட்ட மிகையான தன்னம்பிக்கையின் விளைவாக ஐக்கிய முன்னணி அரசு இழைத்த தவறுகளே. சிறுமுதலாளித்துவம், நகரநடுத்தரவர்க்கத்தினர் ஆகியோரை மட்டுமன்றித் தேசிய சிறுபான்மையினரையும் பகைக்கும் செயல்களில்
ஸ்ரீ.ல.சு.க மட்டுமன்றி அதன் பாராளுமன்ற இடதுசாரித் துணைவர்களும் இறங்கினர். 1975-76 இல் ஐ.மு.அரசில் உட்பூசலின் விளைவாக வெளியேறிய இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் ஸ்ரீ.ல.சு.கட்சியில் இருந்த சோவியத் சார்பு இடதுசாரிகளும், 1977 இல் நடந்த தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சியையே மும்முரமாகத் தாக்கினர் இதன் விளைவாக ஸ்ரீ.ல.சு.க. படுதோல்வி கண்டது. அதைவிட மோசமான தோல்வியும் அழிவும் பாராளுமன்ற இடதுசாரிகட்கு ஏற்பட்டது.

இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்களோ ஜனதா ஆட்சியின் ஒற்றுமையீனத்தாலும் கையாலாகாத்தனத்தாலும் இரண்டு வருடங்கட்குள் மீண்டும் இந்திராகாந்தியை ஆட்சிக்குக் கொண்டுவந்தன. இலங்கையின் அயற்கொள்கையை மேலைநாடுகட்குச் சாதகமானதாகத் திருப்பி, அவர்களது தயவில இலங்கையை இன்னொரு "சிங்கப்பூராக "மாற்ற முற்பட்ட யூ.என்.பி. ஆட்சிஇலங்கையின் அணிசேராக் கொள்கையை பலவீனப்படுத்தி அமெரிக்காவுக்கு அனுசரணையாக நடந்தது மட்டுமன்றி, இஸ்ரேலுடனும் தொடர்புகளை விருத்தி செய்து அரபுநாடுகளது நட்பையும் பலவீனப்படுத்தியது. ( இறுதியில் ஏகாதிபத்திய விரோதப்போராட்டங்கட்கு ஆதரவு தருவதில் முன்நின்ற இலங்கை அரசு, தென் ஆபிரிக்க நிறவெறி அரசைக் கண்டிக்கவும் தயங்கும் இழி நிலைக்கு இறங்கியது). இலங்கையில் அமெரிக்கத் தளங்களை இரகசியமாகப் புகுத்தும் முயற்சியில் சீனக்குடாவில் எண்ணெய்க் குதங்களை அமெரிக்காவுக்குக் குத்தகைக்கு விடும் ஏற்பாடு, குதங்கள் ஏலம் விடப்பட்டபோது, இந்தியா போட்டியிட்டு அதிகவிலை கேட்டதன் மூலம் கைவிடப்பட்டது. இலங்கையினுள் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்கலும் தேசிய ரீதியாக ஜனநாயகத்தின் பலவீனப் படுத்தலும் யூ.என்.பி. அரசாங்கத்தின் நிலையை உள்ளிருந்து பலவீனப்படுத்தின. அயற் கொள்கையாலும் உள்நாட்டு அரசியல் நடத்தையாலும் தன்னைத்தானே பலவீனப்படுத்தி தனிமைப்படுத்திக்கொண்ட யூ.என்.பி. ஆட்சி, 1983 இனக்கொலைகட்கு முன்னரே இலங்கையில் இந்தியத் தலையீட்டுக்கு வசதியான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது.

1983 க்குப்பின் இந்தியாவின் தலையீடு பற்றி அபிப்பிராய வேறுபாடுகள் பல உள்ளன. இவற்றுட்பல தமிழ்நாட்டு மக்கள், தமிழ் நாட்டு மாநில அரசியற் கட்சிகள் இந்திய அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைப் பற்றிய தெளிவீனங் காரணமானவை. 1983 இல் தமிழ் அரசியல்வாதிகளும் 1984 ஐ அடுத்துப் பெருந்தொகையான

www.tamilarangam.net

அகதிகளும் இந்தியாவில் தஞ்சமடையும் வரை இந்திய அரசாங்கம் காத்திருக்கவில்லை. த.வி.கூ. இந்திய அரசாங்கத்துடன் அதற்கு முன்னரே தொடர்பு வைத்திருந்தது. யூ.என். பி. அரசாங்கத்தின் பகைமையான போக்கு. இந்திய அரசாங்கம் பழி வாங்க ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கத் தூண்டியது. 1947 இல் மலையக மக்கள் குடியுரிமை மறுக்கப்பட்டபோது இந்தியா காட்டாத கவலையும் 1958 இனவாத வன்முறையின் போதும் அதைவிடப் பன்மடங்கு உக்கிரமாக 1977 இல் நிகழ்ந்த வன்முறையும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களும் எழுப்பாத கரிசனையும் 1983 இல் ஏற்படக் காரணம் 1983 இல் இந்தியா இலங்கை அரசைத் தன் கைக்குள் கொண்டுவரும் நோக்கம் கைகூடும் சாத்தியப்பாடு இருந்தமையே.

இந்தியா வங்காள தேசவிடுதலையின் பாடங்களை ஒரு பெருவல்லரசின் கண்ணோட்டத்தினின்றே கற்றது. எனவே அந்த நோக்கிலேயே இலங்கைத் தமிழர் பிரச்சினையையும் ஈழ விடுதலைப் போராட்ட இயக்கங்களையும் கையாண்டது. விடுதலை இயக்கங்களுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் தந்த போதே இந்தியா இலங்கையின் உள்விவகாரத்திற் தலையிட்டாயிற்று. இவ்விடுதலை இயக்கங்கள் மத்தியில் வேறுபாடுகளைப் பேணி ஒன்றை இன்னொன்றின் மூலம் அடக்கியாளும் முயற்சியில் இந்தியாவின் நோக்கம் மனிதாபிமான உணர்வு சார்ந்ததல்ல என்பது தெளிவாயிற்று. இந்திய அரசாங்கத்திற்கும் தமிழக அரசியல் கட்சிகளிற்குமிடையிலான கருத்து வேறுபாடுகளையும் தமிழக மக்களது அனுதாபத்தையும் பயன்படுத்தித் தம் அரசியல் சுதந்திரத்தைப் பேணிய விடுதலை இயக்கங்கள் ஒரு சிலவே. தமிழக அரசின் தயவற்ற மாக்ஸிய லெனினிஸச் சார்புடைய சிறு இயக்கங்கள் மீது இந்திய அரசின் கண்காணிப்பும் கட்டுப்பாடும் அதிகமாகவே இருந்தது.

இந்திய அரசாங்கம் விடுதலை இயக்கங்கட்கு பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்தபோதும் ஈழப்பிரிவினையை ஆதரிப்பதாக எந்நிலையிலும் பகிரங்கமாகக் கூறவில்லை. ஆயினும் அந்த எதிர்பார்ப்பு இந்தியாவுடன் நெருங்கிய உறவுடைய இயக்கங்களிடையே இந்திய அரச இயந்திரத்தின் சில பகுதிகளால் ஊக்குவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்களது விடுதலைப் போராட்டம் ஒரு வெகுஜன இயக்கமாக வளர்வதை முன்வரிசை விடுதலை இயக்கத் தலைமைகளும் விரும்பவில்லை. அவர்களது இந்திய போஷகர்களும் விரும்பவில்லை போராட்டத்தின் நீடிப்பு அதன் விரிவடைதலையும் வெகுஜனங்களின் பங்குபற்றலின் விஸ்த்தரிப்பையும் அவசியமாக் கியிருக்கும். அந்த நிலையில் இந்தியாவின் முக்கியத்துவமும் சில இயக்கங்களது ஏகபோகமும் சிதையுமாதலால் துரிதமான ஒரு தீர்வு இந்தியா, இலங்கை அரசாங்கட்கும் முன்வரிசை விடுதலை இயக்கங்கட்கும் அவசியமாயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்களிடையிலான மோதல்கள் ஆதிக்கத்துக்கான மோதல்களாகவே இருந்த வேளை இந்திய இலங்கை அரசாங்கங்களிடையிலான முரண்பாடு இந்திய மேலாதிக்கவாதத்திற்கும் சிங்களப் பேரினவாதத்திற்குமிடையிலான போட்டியாக அமைந்தது. 1987 இல் இலங்கை அரசாங்கம் வடக்கிற்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பாமல் மறித்த நடவடிக்கையை அடுத்து இந்தியா கப்பல்களை அனுப்பி அடைந்த அவமானத்தைப் போக்க விமானமூலம் பொதிகளை இறக்கியதேயொழிய அத்தியாவசியப் பொருட் தட்டுப்பாட்டைத் தீர்க்க அல்ல எவ்வாறுயினும் இந்திய நடவடிக்கை மொத்தத்தில இலங்கை அரசுக்கு ஒரு தெளிவான மிரட்டலாக அமைந்தது. இதன் விளைவாகவே பேச்சு வார்த்தைகளும் இந்திய-இலங்கை உடன்படிக்கையும் உருவாகின இதன் மூலம் இந்தியா தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு இடைக்காலத்தீர்வை மட்டுமே சாத்தியமாக்கியிருப்பின் அது வரவேற்கத்தக்கது. மாறாக, இந்தியா, இலங்கைமீது தன் ஆதிக்கத்தை வலியுறுத்துமாறு சில நிபந்தனைகளையும் புகுத்தியது.

இந்த உடன்படிக்கையையடுத்து இந்தியாவின் நிலைப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு அனுதாபமான ஒன்றாக மாறியது. தன் ஆணைக்கு உட்பட மறுத்த விடுதலைப் புலிகளின் மீது இந்தியா கட்டவிழ்த்த தாக்குதலும் இந்திய ராணுவம் செயற்பட்டுவரும் முறையும் தமிழ்மக்களின் மீதான கருணையினால் இந்தியா செயற்படவில்லை என்பதையே உணர்த்துகின்றன. உடன்படிக்கையின் சில பகுதிகள் பேரளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவெனினும் சாராம்சத்தில் பிரச்சனை தீர்க்கப்படாமலே உள்ளது. தென்னிலங்கையில் எழுந்த இந்திய அரசாங்க விரோத உணர்வின் பரிமாணத்தை இந்திய அரசாங்க விரோதஉணர்வின் பரிமாணத்தை இந்திய அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. தன்னுடைய தயவில் மட்டுமே இலங்கையின் தேசிய ஐக்கியத்தைப் பேணக்கூடிய இலங்கை அரசையே இந்தியா விரும்பியது. அது சாத்தியமாகாத நிலையில் இலங்கையில் ஸ்திரமின்மையை நீடிப்பதையோ அல்லது வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு பொம்மை அரசை நிறுவுவதையோ அது விரும்பலாம். பின்னைய தீர்வு இந்தியாவில் உள்ள தேசிய வாத பிரிவினை இயக்கங்கட்கு ஒரு தூண்டுகோலாக அமையலாம் என்பதால் அது சாத்தியமாகும் வாய்ப்பு தற்போதைக்கு குறைவானதே.

இலங்கையில் இந்தியா எதிர்பார்த்தபடி அதன் விஸ்தாரிப்பு நடவடிக்கைகள் முழு வெற்றிபெறவில்லையெனினும் இந்தியாவின் அடிப்படையான ஒரு நோக்கம், அதாவது, இலங்கையின் சர்வதேச அரசியல் முக்கியத்துவத்தைக் குறைத்து அதனைப் பலவீனப்படுத்தும் பணி, குறுகிய கால அளவிலாவது நிறைவேறியுள்ளது.

அடுத்தபடியாக, மாலைதீவுகளில் நடந்த சதி இந்திய அனுதாபமுள்ள ஒரு விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் முயலப்பட்டு இந்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்கத்தின் ராணுவத் தலையீட்டால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு காலத்தில் இலங்கையின் பாதுகாப்பிலிருந்து பின் பூரணமடைந்த மாலைதீவுகள் இன்று இந்தியாவின் ஆதிக்க மண்டலத்துக்குள் வந்துள்ளன. இந்தச் சதியும் அது முறியடிக்கப்பட்ட சூழ்நிலையும் உலகின் வேறு பகுதிகளில் முன்பு நடந்தேறிய அரசியல் நாடகங்களின் பாணியிலேயே அமைந்துள்ளன. சி. ஐ. ஏ. , கே. ஜீ. பீ. என்ற இயக்குநர்களை நாம் அறிவோம்: அண்மைய தென்னாசிய அரசியலில் ரோ என்ற இந்திய இயக்குநரின் கையை இப்போது அடிக்கடி சந்தேகிக்க வேண்டியுள்ளது.

நேபாள இந்திய சச்சரவு நேபாளத்தின் மீது இந்தியா தன் பன்முகமான ஆதிக்கத்தைத் தொடர்வது பற்றியது. நேபாளம் உடனடியான சூழ்நிலையில் இந்தியாவின் நெருக்கலுக்கு முகங்கொடுக்கவும் சிரமங்களைச் சகித்துத் தேசிய சுயாதிபத்தியத்தை வலியுறுத்தவும் துணிந்துள்ளது. ஆயினும், பொருளாதார, நெருக்கடியின் நீடிப்பு அங்கு அரசியல் ஸ்திரமின்மைக்கும் ஆட்சிக் கவிழ்ப்புக்கும் வழி வகுக்கலாம். எவ்வாறாயினும் நேபாள மக்களது மனதில் இந்திய விரோத உணர்வுகள்
வளர்வதற்கே இந்திய அரசாங்கம் வழி வகுத்துள்ளது. நேபாளம் இந்தியாவின் ஆதிக்கத்தினின்று விடுபடுவதுஒரு நீண்ட விடுதலைப் போராட்டத்தின் மூலமே சாத்தியம். குறுகிய காலத்தில், இந்தியாவுக்கு உடன்பாடான ஒரு புதிய ஏற்பாட்டின் மூலம் நெருக்கடி தணிக்கப்பட்டாலன்றி நேபாளத்தில் அரசியல் ஸ்திரமின்மை தவிர்க்கவியலாதது.

இந்தியா தென்னாசியப் பிராந்தியத்தின் ஏக வல்லரசாக வளர்வதற்கு சர்வதேச அரசியற் சூழ்நிலை மிகவும் உதவியுள்ளது. அமெரிக்காவும் சோவியத் யூனியனும் 1970 களில் மேற்கொண்ட மேலாதிக்க முயற்சிகள் அந்தப் பெருவல்லரசுகளது பொருளாதாரப் பலவீனத்துக்கும்அவமானத்துக்குமே வழி கோலின. வியற்னாமுக்குப் பின், ஈரான் லெபனன் ஆகிய நாடுகளில் அமெரிக்கா அனுபவித்த அவமானம் போன்று சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானிலும் அதை விடக் குறைந்த அளவில் அங்கோலா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளிலும் அனுபவித்தது. இதன் விளைவாகப் பெருவல்லரசுகள் தம் நேரடியான தலையீட்டைத் தமக்கு உடனடியான பாதிப்புள்ள பிராந்தியங்கட்குள் வரையறுக்க முற்பட்டன. இச் சூழ்நிலையில் இந்திய விஸ்தரிப்புவாதம் பெருவல்லசுகளது தலையீடின்றி முன்னேற இயலுமாயிற்று. இந்தியா 1970 களில் இருந்தளவிற்கு சோவியத் தயவை வேண்டியிராத காரணத்தால் அமெரிக்காவுடன் நல்லுறவை விருத்தி செய்ய முற்படுகிறது. ஆயினும் அமெரிக்கா-பாக்கிஸ்தான் உறவின் தொடர்ச்சி இந்திய-சோவியத் உறவின் தொடர்ச்சியை அவசியமாக்குகிறது.

## 5

இந்தியாவின் மேலாதிக்கமும் விஸ்தரிப்புவாதமும் அரசியல், ராணுவ பொருளாதாரத் துறைகளில் செயற்படுகின்றன. பழைய கொலனித்துவ முறையிற் போன்று பிற நாடுகளை ஒரு வல்லரசு தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க நேரடியான ஆட்சியயும் ராணுவப் பிரசன்னமும் அவசியமில்லை. நேரடியான தலையீடு மற்றைய வாய்ப்புக்கள் இல்லாதவிடத்து மட்டுமே அவசியமாகிறது. நாடுகள் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியதத்தையும் விரும்புகின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலையையும் விமோசனத்தையும் வேண்டுகின்றனர். மேலாதிக்கம் உள்ள இடத்தில் எனறும் எதிர்ப்பும் போராட்டமும் இருக்கும். எனவே ஒரு வல்லரசு தன் மேலாதிக்கத்துக்கு ஒரு விலைகொடுத்தே தீர வேண்டும். நேரடியான ஆட்சியாயினும் பொம்மை நிர்வாகமாயினும் பரந்துபட்ட வெகுஜன எதிர்ப்பைச் சமாளிக்க அடக்குமுறையையே பயன்படுத்துகின்றன. பின் விளைவுகளையும், இழப்புக்களையும் நியாயப்படுத்தப் போதிய அரசியற் பொருளாதார லாபங்கள் இல்லாதவிடத்து வல்லரசின் உள்ளேயே முரன்பாடுகள் எழுகின்றன் வியற்னும், ஆப்கானிஸ்தான் காம்போஜம் ஆகிய நாடுகளில் ஆக்கிரமிப்பாளர்கள் தம் ஆக்கிரமிப்பின் விளைபயனை உள்நாட்டிலேயெ அனுபவிக்க நேர்ந்தமை காரணமாக அவர்களது பின்வாங்கல் துரிதமடைந்தது.இந்தியாவின் அமைதிகாக்கும் படையின செயற்பாடுகள் இந்தியாவில அதற்கெதிரான உணர்வுகளைக் கிளறியுள்ளன. இலங்கை அரசுடனன உடன்பாடு காரணமாக அப்படைகள் வெளியேறுவதன் மூலம் இந்திய ராணுவம் ஒரு இக்கட்டான நிலையினின்று மீட்கப்படலாம். ஆயினும் இந்தியத் தலையீட்டை அவசியமாக்கியவர்க்க நலன்கள் அத்துடன் செயலற்றுப் போகமாட்டா. அவை பற்றி நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் .

அமெரிக்காவின் இந்தோசின யுத்தத்தின் போதும் பிற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போதும் அமெரிக்காவில் ஆட்சியில் இருந்த மிதவாத அரசாங்கக் கட்சிகளோ ஜனதிபதிகளோ யுத்தம் மேலும் உக்கிரமடைவதையும் விரிவடைவதையும் தடுக்க வலிமையற்றவர்களாகவே இருந்தனர். ஆயுதப்படைகளும் சி.ஐ. எ போன்ற நிறுவனங்களும் அரசாங்கத்தினுள் ஒரு அரசாங்கம் போன்று செயற்பட்டன இன்றுஞ் செயற்பட்டுவருகின்றன. இவ்வாறே இநதியாவிலும் அரசாங்கத்தையும் பிரதமரையும் குறிப்பிட்ட திசைகளில் நிர்ப்பந்திக்கும் வலிமை அரசியல ராணுவ ஆலோசகர்கள்,நிர்வாகிகள், உளவுநிறுவனங்கள், செய்தி-தகவல் ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கு உண்டு: இவர்கள் பாராளுமன்ற அரசியலுக்கும் அப்பாலான ஆளும் வர்க்க நலன்களின் பிரதிநிதிகளாகவே செயற்படுகிறார்கள். இந்திய விஸ்தாிப்புவாதமும் மேலாதிக்க நடவடிக்கைகளும் அந்த வர்க்க நலன்களைப் பேணவே மேற்கொளளப்படுகின்றன. பாராளுமன்ற அரசியல் அந்த நலன்களைப் பேணுவதற்கான முறைகளில் உள்ள கருத்து வேறுபாடுகளையும் ஆளும் வர்க்கத்தின் அகமுரண்பாடுகளையும் பிரதிபலிக்கலாம். ஆயினும் மொத்தமாக வர்க்க நலன் என்று வரும்போது, பூஷ்ாவா பாராளுமன்ற அரசியல் முதலாழித்துவ நலன்களையே பேணுகிறது. எனவே இந்திய மேலாதிக்கப் போக்கின் முடிவு அதன் ஆளும் வர்க்கத்தின் வீழ்ச்சியுடன் பிணைந்துள்ளது.

அவ்வாறுயின், இந்திய துணைக்கண்டத்தின் சிறிய நாடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவில் ஒரு புரட்சி ஏற்படும் வரை காத்திருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு வரலாறு தரும் பதில் இல்லை என்பதே. இன்று வர்க்கப்போராட்டம் சர்வதேச மயமாகிவிட்டது. எனவே சுரண்டலும் வர்க்க ஒடுக்குமுறையும் தேசிய எல்லை கட்குள்ளும் எல்லைகட்குக் குறுக்கேயும் நடக்கின்றன. ஏகபோக முதலாளித்துவத்துக்கும் தொழிலாழிவர்க்கத்திற்குமிடையிலான முரண்பாட்டை ஒரு தேசிய எல்லைகட்கு தணிக்கும் முயற்சி அதே முரண்பாட்டை முதலாழித்துவத்தின் தேசிய எல்லைக்கு வெளியே உக்கிரமாக்குகிறது. எனவே முன்னேறிய முதலாழித்துவ நாட்டின் தொழிலாழி வர்க்கப் போராட்டமும் ஏகாதிபத்திய விரோதப் போராட்டமும் பிரிக்கக் கூடியனவல்ல. எந்த மேலாதிக்கவாததத்திற்கும் எதிரான எழுச்சி அந்த மேலாதிக்க வல்லரசின் ஆளும்அதிகார வர்க்கத்திற்கு எதிரான எழுச்சியே. இந்தியத் தொழிலாழிவர்கத்தினதும் பிற ஒடுக்கப்பட்ட மக்களதும் போராட்ஙகள் இந்திய மேலாதிக்கத்திற்கெதிரான எழுச்சியால் வலிமை பெறும். இந்திய ஆளும்வர்க்கம் இந்திய தேசியவாதத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தும் அபாயம் உள்ளது. எனினும் அண்மைய அனுபவங்கள் உதாரணமாக நேபாளத்திலும், இந்திய ஆளும்வாக்கத்தின் நடவக்கைகள் வெகுஜன ஆதரவைப் பெறவில்லை என்பதையே காட்டுகின்றன. இது ஒரு நல்ல அறிகுறியே.

இந்திய ஆளும் வர்க்கத்தின் மத்தியில் உள்ள முரண்பாடுகளை அயல்நாடுகளின் விடுதலைப் போராட்ட சக்திகள் பயன்படுத்தமுடியும். ஆயினும் அவற்றையே சார்ந்திருப்பது அபாயகரமானது. தம் மக்களைச் சாராத சக்திகளே அயல் ஆதரவையும் ஆயுதஉதவியையும் நம்பிச் செயற்படுகின்றன: மக்களைச் சார்ந்து நிற்கும் போராட்ட சக்திகளே இறுதியில் வெற்றி பெறுவன.

இந்திய தமிழக அரசியற் தரகர்களை நம்பிச் செயற்பட்ட விடுதலை இயக்கங்கள் பல தமது சுயாதிபத்தியத்தை இந்திய ஆளும்வர்க்கத்திற்குத் தாரை வார்த்துவிட்டன. இந்திய மேலாதிக்க வாதிகளை நம்பி இலங்கையிற் செயற்படும் அரசியற் சக்திகள் போட்டி இயக்கங்கள் பற்றியும் சிங்களப் பேரினவாதம் பற்றியும் நிலவும் அச்சங் கள் காரணமாகவே மென்மேலும் இந்தியாவின் பிடிக்குள் தள்ளப்பட்டுகின்றனர். இந்திய துருப்புக்கள் விரைவில் இலங்கையினின்று வெளியேறினுங்கூட இயக்கங்கள் மத்தியில் விளைக்கப்பட்டுள்ள பகைமையும்,முக்கிய இயக்கத் தலைமைகளின் தவறுன நடைமுறைகளும் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களது ஐக்கியத்தையும் சுயநிர்ணயத்தையும் இலங்கையின் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் மேலும் பலவீனப்படுத்துகின்றன.

இலங்கையினதும் இந்திய மேலாதிக்கத்தின் பாதிப்புக்குட்பட்ட பிற தென்னாசிய நாடுகளினதும் பிரச்சினைகளின் தீர்வில் இந்தியா பங்குபற்றக் கூடாது என்ற கருத்தும் நம்மிடையே உள்ளது. இக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்து புறநிலையைக் கணிப்பெடுக்கத் தவறுகிறது. இந்தியா பிற நாடுகளின் உள்விவகாரங்களிற் தலையிடுவதால் இந்தியாவே பிரச்சனையின் ஒரு பகுதியாக அமைகிற சூழ்நிலைகளில் இந்தியாவின் பங்குபற்றல் நிர்ப்பந்திக்கப்படுகிறது. இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையில் இந்தியா ஒரு நடுநிலை நண்பனாகச் செயற்படும் வாய்ப்பு இருந்தது. இந்திய ஆளும்வர்க்கமும் சில விடுதலை இயக்கங்களும் இந்திய மேலாதிக்க நலன்களை வலியுறுத்துமாறு செயற்பட்டன. இந்திய மேலாதிக்கத்தின் தலையீட்டைத் தவிர்க்க விரும்பும் தேச பக்த சக்திகள் ஐக்கியப்பட்டுச் செயற்படுவதன்மூலமே இந்தியாவின் தலையீடு தம் தேசிய நலன்களிற் குறுக்கிடாதவாறு தடுக்க இயலும்.

இந்திய படைகள் இலங்கையினின்று வெளியேறினும். இந்திய மேலாதிக்கம் இலங்கையினின்று தன் கைகளை எடுத்து விடமாட்டாது. இலங்கையின் சுயாதிபத்தியத்தையும் சுதந்திரத்தையும் பேணச் சகல தேசிய இனங்களதும் சமத்துவத்தினதும் சுயநிர்ணய உரிமையினதும் அடிப்படையிலான தேசிய ஐக்கியம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இது இலங்கையின் தேசிய இனங்கட்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமன்றிச் தென்னாசியாவின் சிறிய நாடுகள் சகலவற்றுக்கும் பொருந்தும். இந்திய மேலாதிக்கத்திற்கெதிரான ஐக்கியத்தைத் தென்னாசிய நாடுகளின் போராட்ட சக்திகள் கட்டியெழுப்ப முன்வர வேண்டும். இது இந்தியாவுக்கோ இந்திய மக்களுக்கோ எதிரான போராட்ட உணர்வாலன்றி ஒரு புதிய மேலாதிக்க சக்திக்கு எதிரான போராட்ட உணர்வால் உந்தப்பட்டதாயும் இந்திய மேலாதிக்கத்தை எதிர்க்கும் நோக்கில் பெருவல்லரசுகட்குச் சாதகமாகச் செயற்பட மறுப்பதாகவும் அமைய வேண்டும். இதுவே தென்னாசியப் பிராந்தியத்தில் விடுதலையையும் சமாதானத்தையும் சமதர்மத்தையும் சுபீட்சத்தையும் வேண்டிநிற்கும் சகல முற்போக்குச் சக்திகளதும் வரலாற்றுப் பணி.

www.tamilarangam.net

www.tamilarangam.net